**அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 22/ 2014**

எனது இலக்கம் : R/1/3/2013
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள்
அமைச்சு,
சுதந்திர சதுக்கம் ,
கொழும்பு 07.
2014 ஆகஸ்ட் மாதம் 29 ஆந் திகதி

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாவட்ட செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள்

**திறமையின் அடிப்படையில் இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை 2013 (2014)**

திறமையின் அடிப்படையில் இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. (அ) இவ் அறிவித்தலில் "**செயலாளர்**" என்ற பதம் அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரைக் குறிக்கும்.

(ஆ) "**சேவை**" என்ற பதம் இலங்கை நிர்வாக சேவையைக் குறிக்கும்.

02 எழுத்துப் பரீட்சை, சேவை மூப்பு தொடர்பான மதிப்பீடு மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை என்பவற்றில் பெற்றுக் கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

அதற்கிணங்க, எழுத்துப் பரீட்சை, சேவை மூப்பு மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை என்பவற்றில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் கூட்டுத்தொகையின் அடிப்படையில் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பாதாரரிலிருந்து திறமை ஒழுங்கில், நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு இணங்க ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உத்தேசித்துள்ள எண்ணிக்கையினர் இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

எழுத்துப் பரீட்சை - பின்வரும் மூன்று (03) வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும்.

1. பொது விவேகம்
2. தாபன விதிக்கோவை, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கை விதிகள்
3. அரசாங்க நிதிப் ஒழுங்கு விதிகளும் அரசாங்க கொள்வனவு - வழங்கள் செயற்பாடுகள்

<u>பரீட்சை நடைபெறும் திகதி -</u> இப்பரீட்சை பரீட்சை **2014 டிசம்பர்** மாதம் கொழும்பு நகரத்தில் மாத்திரம் நடாத்தப்படும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு உட்பட்ட வகையில் இப்பரீட்சையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரத்தை செயலாளர் கொண்டுள்ளார். பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறுமிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக வேண்டி ஏற்படும்.

<u>நேர்முகப் பரீட்சை</u> - எழுத்துப் பரீட்சையின் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் தோற்றிய விண்ணப்பதாரர்களில், எழுத்துப் பரீட்சையிலும் சேவை மூப்பிலும் போதியது என அரசாங்க சேவை

ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் மட்டத்தில் மொத்தப் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்களுக்காக சாதாரண மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்படும். அப்பரீட்சை நடைபெறும் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைக்கு இணங்க செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

03. நியமிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 12 ஆகும். இறுதி வெற்றிடங்களுக்காக அல்லது இறுதி வெற்றிடங்கள் சிலவற்றுக்காக சம புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கையை விஞ்சுகின்ற சந்தர்ப்பத்தில் அவ் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் செயலொழுங்கு விதிக்கோவையின் 80 ஆம் பிரிவுக்கு இணங்க அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைக்கு இணங்கத் தீர்மானிக்கப்படும்.

04. சேவை நிபந்தனைகள் -

4.1 அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2013.12.23 ஆந் திகதிய 1842/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசரிக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்பில் செய்யப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் செய்யப்படவுள்ள திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவையினதும் நிதிப் பிரமாணக் கோவையினதும் ஏற்பாடுகளுக்கும் 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்குவிதிகளுக்கும் உட்பட்ட வகையில் தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

4.2 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். விதவைகள் மற்றும் அநாதைகள்/தபுதாரர்கள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புப் பணம் செலுத்த வேண்டும்.

4.3 நியமனங்கள் ஒரு வருட பதில் கடமைக்கு உட்பட்டவையாகும். இலங்கை நிர்வாக சேவையின் தரம்IIIஇற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 03 வருடங்களில் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

4.4 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக்கு இணங்கவும் அதன் நேரெதிர் விளைவான சுற்றறிக்கைகளுக்கு இணங்கவும் பதவியில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 05 வருட காலத்துக்குள் உரிய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

4.5 தமக்கு வழங்கப்படுகின்ற பதவியில் உரிய தினத்தில் கடமைகளை பொறுப்பேற்கத் தவறும் மற்றும்/அல்லது நியமிக்கப்படும் பதவியில் அல்லது நியமிக்கப்படும் பிரதேசத்தில் கடமையைப் பொறுப்பேற்க மறுக்கும் அல்லது பொறுப்பேற்காது தட்டிக்கழிக்கும் விண்ணப்பதாரர்களின் நியமனம் இரத்துச் செய்யப்படலாம்.

05. கட்டமைப்பு மற்றும் மாதாந்த சம்பளத் திட்டம் -

இச்சேவைக்கு 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் எஸ்எல்1-2006 சம்பளத் தொகுதி ஏற்புடையதாகும். அந்த சம்பள தொகுதிக்குரிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு அமையும்.

ரூபா 22,935 - 10x645 - 8x790 - 17x1,050 - 53,555/- (மாதாந்தம்)

06. ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் -

(அ) தொடர்புடைய தகைமைகள் மற்றும் அனுபவம் -

i. அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதி உயர் வகுப்புக்குரிய அல்லது மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதி உயர் வகுப்புக்குரிய நிரந்தமானதும், ஓய்வூதியம் உரித்துடையதுமான பதவியிலுள்ள ஒரு உத்தியோகத்தராக இருத்தல்.;

அல்லது

ii. அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் அல்லது மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் முதலாம் (I) வகுப்பில் பத்து (10) வருடங்கள் செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைக் கொண்ட அச்சேவையில் இருபது (20) வருடங்களுக்குக் குறையாத செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலப் பூர்த்தி செய்த உத்தியோகத்தராக இருத்தல்.

குறிப்பு :- இங்கு சேவைக் காலத்தைக் கணிக்கின்ற போது அரசாங்க சேவையில் மற்றும்/ அல்லது மாகாண அரசாங்க சேவைகளின் தொடர்புடைய தொடர்ச்சியான சேவைக் காலங்களின் கூட்டுத்தொகை கணிப்பிடப்படும். மேலதிக ஊழியர் என்ற அடிப்படையில் ஏதேனும் ஒரு பதவியொன்றுக்கு நியமனம் செய்யப்படும் சந்தர்ப்பங்கள் அல்லது நியமனம் முற்திகதியிடப்படும் சந்தர்ப்பங்கள் பதவியொன்றில் பதில் கடமை மேற்கொள்கின்ற சந்தர்ப்பங்கள் என்பன சேவைமூப்புக்கான புள்ளிகள் வழங்குகின்ற போது கவனத்திற் கொள்ளப்படமாட்டாது என்பதுடன் அதற்காக நிரந்தரப் பதவி மாத்திரமே அடிப்படையாகக் கொள்ளப்படும்.

(ஆ) வயது மற்றும் பூர்த்தி செய்திருக்க வேண்டிய ஏனைய தகைமைகள்

i. ஐம்பத்து ஐந்து (55) வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.
ii. மேலே 06. அ இல் குறிப்பிடப்பட்ட சேவையொன்றில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்.
iii. திருப்திகரமான சேவை வரலாற்றையைக் கொண்டிருத்தலும் தமது முழுச் சேவைக் காலத்திலும் எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகாதவராக இருத்தலும்.
iv உடன் முந்திய ஐந்து (05) வருடங்களில் அனைத்துச் சம்பள ஏற்றங்களையும் தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய தினத்தில் உழைத்திருத்தல்.

(இ) தகைமைகளுக்கான வரையறைகள்

i. திறமை அடிப்படையிலான போட்டிப் பரீட்சைக்கு இரண்டு தடவைகளுக்கு மேல் தோற்றுவதற்கு எந்தவொரு விண்ணப்பதாரருக்கும் அனுமதியளிக்கப்பட மாட்டாது. (விண்ணப்பதாரர்கள், முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பரீட்சைக்குத் தோற்றிய தடவைகளின் எண்ணிக்கை இதன் போது கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.)
ii. இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான தகைமைகள் **2013.12.31** ஆந் திகதியில் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
iii. எந்தவொரு சமயத்தினதும் துறவியாக உள்ள எவருக்கும் இப்போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.

07. இச்சுற்றறிக்கையின் 14.1 ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளவாறு குறித்த பாடங்கள் மூன்றிலும் 50 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்களின் சேவைமூப்புக்கான புள்ளிகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியின் அடிப்படையில் செயலாளரினால் கணிக்கப்படும். அது தொடர்பாக அறிவிக்கப்பட்டதன் பின்னர், விண்ணப்பதாரர்கள் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக உண்மையானது என உறுதிப்படுத்தப்பட்ட பின்வரும் ஆவணங்களை அரசாங்க நிர்வாக அமைச்சுக்கு அனுப்புதல் வேண்டும்.

1. அரசாங்க அல்லத மாகாண அரசாங்க சேவையில் முகாமைத்துவ உதவியாளர், எழுதுநர், சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர், கணக்குப் பதிவாளர், சிறாப்பர், களஞ்சியப் பொறுப்பாளர் சேவைக்கு முதன் முதலில் நியமனம் பெற்ற நியமனக் கடிதம்
2. தொடர்புடைய பதவி உயர்வுக் கடிதம்(வகுப்பு II, வகுப்பு I, அதி உயர் வகுப்பு)

3. மாகாண அரசாங்க சேவையிலிருந்து அல்லது மத்திய அரசாங்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பின் அது தொடர்பான விபரங்கள்
4. சம்பளமற்ற அல்லது அரைச் சம்பள லீவுகள் பற்றிய விபரம்
5. ஒழுக்காற்றுக் கட்டளைகள் தொடர்பான விபரங்கள்

08. <u>விண்ணப்பிக்கும் முறை :-</u>

(அ) இச்சுற்றறிக்கையின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு இணங்க விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். அது ஏ4 அளவிலான கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி பரீட்சார்த்தியினாலேயே பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் தலைப்பு 1.0 முதல் 2.13 வரை முதலாம் பக்கத்திலும் 3.0 முதல் 6.0(a) வரையான பகுதி இரண்டாம் பக்கத்திலும் 6.0(b) முதல் 9.0 வரையான பகுதி மூன்றாம் பக்கத்திலும் அமையக்கூடியவாறு விண்ணப்பப் படிவங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்க. இதற்கு கணனி மூலம் தயாரிக்கப்பட்ட / தட்டச்சு செய்யப்பட்ட விண்ணப்பங்களையும் பயன்படுத்த முடியும். விண்ணப்பப்படிவதில் குறிப்பிடும் தகவல்களை தங்களது கையெழுத்தினாலேயே தெளிவாக நிரப்புதல் வேண்டும். மாதிரிப் படிவத்திற்கு இணங்கத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும், தகவல்கள் முழுமையாகக் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியொன்றை கைவசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமைய முடியும். பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பங்கள் இவ் அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு இணங்கிய வகையில் உள்ளனவா என்பதில் விண்ணப்பதாரர்கள் கவனம் செலுத்துவது அவசியமாகும். அவ்வாறில்லாத விடத்து அவை நிராகரிக்கப்பட முடியும்.

(ஆ) எழுத்துப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.. பரீட்சார்த்தி தான் சேவையில் இணைந்த ஊடக மொழியில் அல்லது பிறிதொரு அரசகரும மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். **தாங்கள் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கின்ற மொழி மூலத்திலேயே விண்ணப்பப்படிவங்கள் தயாரித்து பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் ஊடக மொழியைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது** விண்ணப்பப் படிவத்தைத் தயாரிக்கின்ற போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை, சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் , தமிழ் விண்ணப்பங்களில் தமிழிற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், எழுவது அவசியமாகும்.

(இ) பரீட்சைக்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை தாம் பணி புரிகின்ற திணைக்களத்தின் தலைவர்/ அமைச்சின் செயலாளர் ஊடாகப் பதிவுத் தபாலில் 2014 **செப்டெம்பர் மாதம்** 24 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "**செயலாளர், அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 07**" என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"திறமையின் அடிப்படையில் இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2013 (2014)" என்று குறிப்பிடுதல் வேண்டும்.**

(ஈ) உத்தியோகத்தர்களால் பூர்த்தி செய்யப்பட்டுச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களை, அவை அலுவலகத்திற்கு கிடைத்த தினத்திலேயே அலுவலக திகதி முத்திரையைப் பதிப்பதும், பரீட்சார்த்திகள் குறிப்பிடும் தகவல்கள் சரியானவை என்று திணைக்களத் தலைவர் உத்தியோகபூர்வ முத்திரையைப் பதித்து உறுதிப்படுத்துவதும், உறுதிப்படுத்திய திகதியையும் குறிப்பிட்டு விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் மேலே தரப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்புவதும் திணைக்களத் தலைவரின்/ அமைச்சின் செயலாளரின் பொறுப்பாகும்.

(உ) கூட்டுத்தாபனமொன்றின் அல்லது நியதிச் சட்ட சபையொன்றின் சேவைக்காக தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்ள/ சேவை இரண்டாம் நிலைப்படுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பில் அவ் அமைச்சின் செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் மேலே குறிப்பிட்ட முறையில் அனுப்பப்படுதல் வேண்டும்.

(ஊ) குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் தாமதமடையும் அல்லது தொலைகின்ற விண்ணப்பங்கள் தொடர்பிலும் இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரி தவிர்ந்த வேறு ஆட்களுக்கு அனுப்பப்படுகின்ற விண்ணப்பங்கள் தொடர்பிலும் செய்யப்படும் முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(எ) விண்ணப்பிக்கின்ற சந்தர்ப்பத்தில் காணப்பட்ட விண்ணப்பதாரர்களின் பதவிகள் மற்றும் சேவை நிலையம், இது தொடர்பில் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் ஏற்புடையதாகும் அதேவேளை விண்ணப்பங்களை அனுப்பியதன் பின்னர் அது தொடர்பில் ஏற்படும் மாற்றம் எதுவும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

09. <u>பரீட்சைக்கான அனுமதி-</u>

எழுத்துப் பரீட்சைக்காக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப்பத்திரங்கள் அனுப்பப்படும். பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப் பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். தமது அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் இறுதியான தீர்மானங்களாக அமையும்.

(அ) பரீட்சார்த்திகள் தமக்கு குறித்துரைக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அவ் அறிவித்தல் வெளியாகி 02 அல்லது 03 நாட்கள் கடந்ததன் பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்காவிடின் அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாகப் பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவிப்பது அவசியமாகும். உங்களிடமுள்ள விண்ணபத்தின் பிரதியையும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டிருப்பின் அதற்கான பற்றுசீட்டின் பிரதியையும் பரீட்சையின் பெயர், உங்கள் முழுப் பெயர் மற்றும் முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகிய விபரங்களைக் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திக்கு அறிவிக்க வேண்டும். நீங்கள் கொழும்புக்கு வெளியே உள்ள ஒரு விண்ணப்பதாரியாயின் மேலே குறிப்பிட்ட உங்களது விபரங்களுடன் அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றை தொலைநகல் (ஃபக்ஸ்) மூலம் உங்களுக்கு அனுப்புவதற்கு உங்களது தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு தொலைநகல் மூலம் அனுப்புவது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

<u>**குறிப்பு**</u> : விண்ணப்பதாரர் ஒருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக் கொண்டதாக அமையமாட்டாது என்பதைக் கவனத்திற் கொள்வது அவசியமாகும்.

10. <u>விண்ணப்பதாரர்களின் ஆள் அடையாளம்:-</u>

பரீட்சார்த்தி தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியடையக் கூடியவாறு பரீட்சை மண்டபத்தில் தனது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) ஆட் பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
(ஆ) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு

11. <u>பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டணைகள்</u>

பரீட்சார்த்தி ஒருவர் தகைமையற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலத்தில் அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தியொருவர் ஏதேனும் விடயங்களை அவை

பொய்யானவை என்பதை அறிந்த நிலையில் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிய வருமிடத்து, அல்லது ஏதேனும் முக்கியமான ஒரு விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருப்பாராயின் அவர் சேவையிலிருந்து நீக்கப்பட முடியும்.

12. இவ் ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டிராத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அவை தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு உட்பட்ட வகையில் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

13. <u>பரீட்சை முறை மற்றும் பரீட்சை மொழிமூலம் -</u>

(அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய ஊடக மொழிகளில் மாத்திரம் நடாத்தப்படும்.

(ஆ) அரசாங்க சேவையில் நுழைவதற்குத் தகுதிபெறுவதற்கான பரீட்சையில்/நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்த மொழியில் அல்லது அரசகரும மொழியொன்றிலேயே பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**<u>குறிப்பு :</u>** :

(I) பரீட்சார்த்தி பரீட்சையின் எல்லா வினாப் பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும்.

(II) விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்ட பரீட்சை தோற்றும் ஊடக மொழியை மாற்றுவதற்கு பின்னர் பரீட்சார்த்திகளுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

<u>கவனிக்க :-</u>

நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவது நியமனம் வழங்கப்படுவதற்கான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதாகக் கருதப்படமாட்டாது.

14. <u>ஆட்சேர்ப்பு முறை</u>

14.1 எழுத்துப் பரீட்சை

பின்வரும் பாடங்களைக் கொண்ட மூன்று (03)வினாத்தாள்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சையொன்று நடாத்தப்படும். பாடங்கள் மற்றும் அவற்றில் சித்தியடைவதற்குப் பெற வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகளின் கீழே தரப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றுவது கட்டாயமானதாகும்.

| | பாடம் | புள்ளிகள் | சித்தியடைவதற்குப் பெறவேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | பொது விவேகம் | 100 | 50 |
| 2 | தாபன விதிக்கோவை, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கை விதிகள் | 100 | 50 |
| 3 | அரசாங்க நிதிப் ஒழுங்கு விதிகளும் அரசாங்க கொள்வனவு - வழங்கள் செயற்பாடுகள் | 100 | 50 |

<u>பாடத் திட்டம் :</u>

(i) பொது விவேகம்

எண்கணிதம் சார்ந்த, மொழிசார்ந்த மற்றும் உரு வடிவிலான கட்டமைப்புக்கள் மற்றும் இடைத் தொடர்புகள் என்பற்றுடன் தொடர்புடைய வகையில் முன்வைக்கப்படும் புதிர்கள் தொடர்பில் பகுப்பாய்வுத் திறன், தர்க்கத் திறன், விளக்கும் திறன், வேறு நிலைமைகளில் பயன்படுத்தும் திறன், தீர்மானம் எடுத்தல் என்பன தொடர்பில் பரீட்சார்த்திகள் கொண்டுள்ள விவேக மட்டத்தை அளவிடுவது இதன் நோக்கமாகும்.

(காலம் 1 1/2 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள். இவ்வினாப்பத்திரம் பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்க வேண்டிய வினாக்கள் என்பவற்றைக் கொண்டதாக அமையும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.)

(ii) தாபன விதிக்கோவை, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கை விதிகள்

இவற்றின் மூலம் விண்ணப்பதாரர்களின் தாபன விதிக்கோவை, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்குவிதிகள் என்பன தொடர்பான அறிவு சோதிக்கப்படும்.

(காலம் 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள். இவ்வினாப்பத்திரம் பல்தேர்வு வினாக்கள், சுருக்க வினாக்கள், கட்டமைப்புக் கட்டுரை வினாக்கள், கட்டுரை வினாக்கள் என்பவற்றைக் கொண்டிருக்கும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.)

(iii) அரசாங்க நிதிப் ஒழுங்கு விதிகளும் அரசாங்க கொள்வனவு - வழங்கள் செயற்பாடுகள்

அரசாங்க நிதிப் பிரமாணங்கள் மற்றும் அரசாங்க பெறுகைச் செயன்முறைகள் தொடர்பில் விண்ணப்பதாரர்களின் அறிவு இதன் மூலம் பரீட்சிக்கப்படும்.
(காலம் 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள். இவ்வினாப்பத்திரம் பல்தேர்வு வினாக்கள், சுருக்க வினாக்கள், கட்டமைப்புக் கட்டுரை வினாக்கள், கட்டுரை வினாக்கள் என்பவற்றைக் கொண்டிருக்கும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.)

14.2 நேர்முகப் பரீட்சை

நேர்முகப் பரீட்சையானது, சாதாரண நேர்முகப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஆகிய இரண்டு (02) பகுதிகளைக் கொண்டிருக்கும்.

(அ) சாதாரண <u>நேர்முகப் பரீட்சை</u>

i. மேலே 06 ஆம் பந்தியில் குறிப்பிட்ட ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதையும் அதன் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் தொடர்பான வரையறைகளுக்கு உட்பட்டவையாக உள்ளவனவா என்பதையும் சோதிப்பதற்காக சாதாரண நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

ii. சாதாரண நேர்முகப் பரீட்சை சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.

(ஆ) <u>கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை</u>

i. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபை விண்ணப்பதாரர்களின் முகாமைத் திறன்கள், தலைமைத்துவப் பண்புகள், தொடர்பாடல் திறன்கள், மற்றும் ஆளுமையை அளவிடுவதற்காக பின்வரும் நடைமுறைகளுக்கு இணங்க கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அதன் போது பெறக்கூடிய ஆகக் கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை இருபத்தைந்து (25) ஆகும்

| | **பாடத் துறை** | **அதிகபட்ச புள்ளிகள்** |
|---|---|---|
| 01 | முகாமைத்துவத் திறன்கள் | 10 |
| 02 | தலைமைத்துவப் பண்புகள் | 05 |
| 03 | தொடர்பாடல் திறன்கள் | 05 |
| 04 | ஆளுமை | 05 |
| | **மொத்தம்** | **25** |

ii. ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது ஐம்பது சதவீதம் (50%) அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்களில் அனைத்துப் பாடங்களினதும் புள்ளிகளின் கூட்டுத் தொகை, சேவைமூப்பு என்பவற்றின் அடிப்படையில் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்கள் சாதாரண நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெறுவர். நிரப்புவதற்கு உத்தேசித்துள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் நிரப்புவதற்கு உத்தேசித்துள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 25% சதவீதம் ஆகிய இரண்டினதும் கூட்டுத் தொகையாக அமையும் 15 பேர் மாத்திரமே சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். தகைமை பெறும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை மேலே குறிப்பிட்ட எண்ணிக்கைக்குச் சமனானதாக இல்லாத சந்தர்ப்பங்களில் அவ்வாறு தகைமை பெறும் பரீட்சார்த்திகள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

iii. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு முன்னர் தகைமைகளை சோதிப்பதற்காக சாதாரண நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அதற்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. சாதாரண நேர்முகப் பரீட்சையின் போது ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்குத் தகைமை பெறுவர். மேலே குறிப்பிட்டவாறு சாதாரண நேர்முகப் பரீட்சை அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களில் ஏதேனும் ஒரு தொகையினர் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்குத் தகைமை பெறாத போதிலும், அவ்வாறு தகைமை பெறாதவர்களுக்குப் பதிலாக வேறு விண்ணப்பதாரர்கள் மீண்டும் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படமாட்டார்கள்.

கவனிக்க - நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவது நியமனம் வழங்கப்படுவதற்கான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதாகக் கருதப்படமாட்டாது.

14.3 சேவை மூப்பு

சேவை மூப்புக்கு அதிகபட்சமாக நூறு (100) புள்ளிகள் வழங்கப்படும். சேவை மூப்புக்காக வழங்கப்படும் புள்ளிகள் பின்வருமாறு கணிக்கப்படும்.

(அ) i. முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதி உயர் வகுப்பிற்குரிய பதவியொன்றில் ஆற்றிய சேவைக்கு ஒரு வருடத்திற்கு பத்து புள்ளிகள் (10) என்ற அடிப்படையிலும்

ii. முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்புIஇலுள்ள உத்தியோகத்தர்களுக்கு முகாமைத்துவ உதவியாளர் சேவையில் இருபது (20) வருட செயலூக்கமிக்க சேவைக் காலம் பூர்த்தியடைந்ததன் பின்னரான ஒவ்வொரு வருடத்திற்கும் (08) புள்ளிகள் என்ற அடிப்படையிலும்,

(ஆ) செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்திற்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்.

(இ) ஆறு மாதங்களுக்குக் குறைந்த எந்தவொரு காலப் பகுதிக்கும் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. எனினும் 6 மாதங்களுக்கு மேற்பட்ட ஒரு வருடத்திற்குக்

குறைந்த காலப் பகுதிற்கு முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதி உயர் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு ஐந்து (05) புள்ளிகள் வீதமும் முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் I இலுள்ள உத்தியோகத்தர்களுக்கு நான்கு (04) புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

(ஈ) மேலதிக பதவியணி அடிப்படையில் ஏதேனும் பதவியொன்றுக்கு நியமனம் பெற்ற அல்லது முற்திகதியிடப்பட்ட நாட்கள் சேவைமூப்புக்கான புள்ளிகளை கணிக்கின்ற போது கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. குறித்த பதவியில் கடமையைப் பொறுப்பேற்ற திகதியின் அடிப்படையிலேயே அதற்கான காலம் கணிக்கப்படும்.

(உ) மேலே அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அல்லது மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையொன்றின் அதி உயர் வகுப்பிலுள்ள உத்தியோகத்தர்களின் சேவை மூப்புக்கான புள்ளிகளை கணிக்கின்ற போது மேலே அ (ii) மூலம் உள்ளடக்கப்படுகின்ற ஏதேனும் காலப் பகுதிகள் இருப்பின் அவற்றுக்கும் குறித்த புள்ளி வழங்கலின் போது புள்ளிகள் வழங்கப்படும்.

15. பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகளுக்கு அந்நியமனங்களை வழங்குகின்ற சந்தர்ப்பத்தில் செல்லுபடியாகும் ஒழுங்குவிதிகள் மற்றும் ஏற்பாடுகளின் கீழ் நியமனம் பெறுவதற்கு தகுதி பெறவில்லை எனக் கருதப்படுவார்களாயின் அல்லது திருப்திகரமற்ற வேலை நடத்தையின் காரணமாக நியமனம் வழங்காமல் இருக்கும் உரிமையை அரசாங்க சேவை ஆணைக்குழு கொண்டுள்ளது.

16. ஏதேனும் ஒரு தொகை வெற்றிடங்களை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாமல் இருப்பதற்கும், இங்கு ஒழுங்குவிதிகள் செய்யப்பட்டிராத விடயங்கள் தொடர்பில் தீர்மானங்களை எடுப்பதற்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது.

17. இந்த அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி வாசகங்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படுமாயின் சிங்கள மொழியிலான வாசகம் செல்லுபடியாகுதல் வேண்டும்.

**அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி**

பீ.பி. அபேகோன்

செயலாளர்,

அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு

மாதிரி விண்ணப்பப் படிவம்

(அலுவலக உபயோகத்திற்காக)

**திறமையின் அடிப்படையில் இலங்கை நிர்வாக சேவையின் தரம் IIIஇற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2013 (2014)**

**Competitive Examination For the Recruitment to Grade III of Sri Lanka Administrative Service in Merit Stream - 2013(2014)**

1.0 ஊடக மொழி

பரீட்சைக்குத் தோற்றும் ஊடக மொழி

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(குறித்த இலக்கத்தை கூட்டினுள் எழுதுக) பரீட்சைக்குத் தோற்றும் ஊடக மொழியிலேயே விண்ணப்பப்படிவம் பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும்.

2.0 தனிப்பட்ட தகவல்கள் :

2.1 முதலெழுத்துக்கள் இறுதியிலிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்:

உதா: GUNAWARDHANA, M.G.B.S.K

........................................................................................................................

2.2 முழுப் பெயர் ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில் :........................................................................................

........................................................................................................................

2.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :........................................................................................

........................................................................................................................

2.4 தற்போதைய அலுவலக முகவரி ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில் :(அனுமதி அட்டை இந்த முகவரிக்கு அனுப்பப்படும்)

........................................................................................................................

........................................................................................................................

2.5 அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :........................................................................................

........................................................................................................................

2.6 தனிப்பட்ட முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) :........................................................................................

........................................................................................................................

2.7 தனிப்பட்ட முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :........................................................................................

........................................................................................................................

2.8 பால்: ஆண் - 0 குறித்த இலக்கத்தை கூட்டினுள் எழுதுதுக
பெண் - 1

2.9 விவாகமானவர்/விவாகமாகாதவர்: குறித்த இலக்கத்தை கூட்டினுள் எழுதுக
விவாகமானவர் - 1
விவாகமாகாதவர் - 2

2.10 தேசிய அடையாள அட்டைஇலக்கம் :

2.11 பிறந்த திகதி : வருடங்கள் மாதங்கள் நாட்கள்

2.12 2013.12.31 திகதியில் வயது : வருடங்கள் மாதங்கள் நாட்கள்

2.13 தொலைபேசி இலக்கம் (இருப்பின்) :

3.0a) (i)அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் முகாமைத்துவ உதவியாளர், எழுதுநர், சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர், புத்தகக் காப்பாளர், சிறாப்பர், களஞ்சியப் பொறுப்பாளர் சேவைக்கான முதல் நியமனத் திகதி.........................................

(ii) நியமனம் பெற்ற சேவை. .........................................................................

(iii) நியமனக் கடிதத்தின்

a) இலக்கம்.............................................................

b) திகதி ..................................................................

c) வழங்கிய அதிகாரி......................................................................

(iv) (i) அச்சேவை/அப்பதவி அரசாங்க சேவை, மாகாண அரசாங்க சேவை என்பவற்றில் எதற்குரியது.........................................

(ii) அச்சேவைக்குரிய/ அப்பதவிக்குரிய சம்பளக் குறியீட்டு இல.................................................................

b) (i) சேவை நிரந்தரமாக்கப்பட்ட திகதி ....................................................

(ii) சேவை நிரந்தரமாக்கப்பட்ட கடிதத்தின்

a) இலக்கம் ...................................................

b) திகதி ..................................................................

c) வழங்கிய அதிகாரி......................................................................

4.0 இவ் வர்த்தமானி அறிவித்தலின் 6(அ)I மற்றும் 6(அ)ii ஆகியவற்றில் எப்பிரிவின் கீழ் இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்குத் தகைமை பெறுகின்றீர்................................................................

5.0 வர்த்தமானி அறிவித்தலின் 06 ஆம் பந்தியின் குறிப்பு (அ) விற்கு இணங்க விண்ணப்பிப்பதற்குத் தகைமை பெறுவதற்கு பல சேவைக் காலங்கள் ஏற்புடையதாக இருப்பின் அந்த நிரந்தரமானதும் தொடர்ச்சியானதுமான சேவைக் காலங்கள் தொடர்பான விபரங்கள்

| அரச முகாமைத்துவ சேவையின் அல்லது மாகாண அரசாங்க சேவை/ வகுப்பு | தரமுயர்வு நடைமுறைக்கு வந்த திகதி | தரமுயர்வுக் கடிதம் வழங்கப்பட்ட திகதி | தரமுயர்வு வழங்கிய கடித இலக்கம் | வழங்கிய அதிகாரி | நியமனம் முற்திகதியிடப்பட்டிருப்பின் அல்லது மேலதிக சேவை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருப்பின் அது தொடர்பான விபரங்கள் |
|---|---|---|---|---|---|
| (i) வகுப்பு II<br>(ii) வகுப்பு I.<br>(iii)அதி உயர் வகுப்பு | | | | | |

6.0a) சேவைக் காலத்தில் பெற்ற சம்பளமற்ற/அரைச் சம்பள லீவு விபரங்கள்

| தொடர் இலக்கம். | விடுமுறை அனுமதிக்கான நிபந்தனைகள் | காலப் பகுதி | | எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|
| | | முதல் | வரை | வருடங்கள் | மாதங்கள் |
| i. | தாபன விதிக்கோவையின் V:2:5:4 | | | | |
| ii. | தாபன விதிக்கோவையின் XII:9 | | | | |
| iii | தாபன விதிக்கோவையின் XII:15 | | | | |
| iv | தாபன விதிக்கோவையின் XII:16 | | | | |
| v | தாபன விதிக்கோவையின் XII:21/22/23 | | | | |
| vi | தாபன விதிக்கோவையின் XII:36 | | | | |
| vii | 10 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | | | | |
| viii | 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | | | | |
| | முழுமையான காலப் பகுதி | | | | |

b) சேவைக் காலத்தில் நிகழ்ந்த ஒழுக்காற்று விடயங்கள்

| ஒழுக்காற்றுக் கட்டளை | குற்றப்பத்திரங்களுக்கு இணங்க குற்றங்கள் நிகழ்ந்த காலப் பகுதி | குறித்த ஒழுக்காற்றுக் கட்டளையை வழங்கிய அதிகாரி | ஒழுக்காற்றுக் கட்டளையைக் கொண்ட கடிதத்தின் இலக்கம் மற்றும் திகதி |
|---|---|---|---|
| | | | |
| | | | |

7.0 மேற்குறித்த விடயங்களின் அடிப்படையில் வர்த்தமானி அறிவித்தலின் 6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்க அனுமதிக்கப்பட்ட பதவியொன்றில்/ ஈடுபட்டுள்ள சேவையில்/தரத்தில் தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய 2013.12.31 திகதியில் **செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலம்** ( வர்த்தமானி அறிவித்தலின் 1 (இ) மற்றும் (ஈ) ஆகிய பந்திகளைப் பார்க்கவும்) ....................................................................

8.0 விண்ணப்பாதாரரின் உறுதியுரை :

**2013.12.31 திகதிக்கு** உடன்முந்திய ஐந்து வருட காலப்பகுதியில் ( சேவைக்குரிய திணைக்களப் பரீட்சைகளில் சித்தியடைய வேண்டும் என்ற நிபந்தனை காணப்படும் சம்பள ஏற்றங்கள் தவிர) அனைத்துச் சம்பள ஏற்றங்களும் என்னால் உழைக்கப்பட்டுள்ளன என்றும், இவ் வர்த்தமானி அறிவித்தலின் 06 ஆம் பந்திக்கு இணங்க 2013.12.31 **திகதியில் செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைக்** கொண்டிருப்பதாகவும், முழுச் சேவைக் காலத்திலும் எச்சரிக்கப்படுதல் தவிர எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும் பிரகடனப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சையை நடாத்துவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்பட்டு நடப்பேன் என்பதையும் இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

............................ ..........................................................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

9.0 திணைக்களத் தலைவரின் சான்றுப்படுத்தல் : (விண்ணப்பதாரியின் தனிப்பட்ட கோவைக்கு இணங்க)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு/திருமதி/செல்வி........................................................... மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ள/ .................................................. மாகாண சபையின் கீழ் உள்ள ............................................................................... அமைச்சில்/ திணைக்களத்தில் .......................... பதவியில் பணிபுரிகின்றார் என்பதையும், மேலே தரப்பட்ட விடயங்கள் உண்மையானவை என்றும் **2013.12.31 திகதி**க்கு முன்னரான ஐந்து வருட காலப் பகுதியில் (சேவைக்குரிய அல்லது திணைக்களத்திற்குரிய பரீட்சைகளில் சித்தியடைய வேண்டும் என்பது நிபந்தனையாகவுள்ள சம்பள ஏற்றங்கள் தவிர) அவருடைய சம்பள ஏற்றங்கள் அனைத்தையும் உழைத்துள்ளார் என்றும் வர்த்தமானி அறிவித்தலின் 6 ஆம் பந்திக்கு இணங்க 2013.12.31 **திகதியில் செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தை** முழுச் சேவைக் காலத்திலும் செய்த குற்றங்களுக்காக (எச்சரிக்கைகள் தவிர) எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் அவர் ஆளாகவில்லை என்பதையும், குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து ஒழுங்குவிதிகளுக்கு இணங்கவும் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெற்றுள்ளார் என்றும் அவர் எனது முன்னிலையில் விண்ணப்பப் படிவத்தில் கையொப்பமிட்டார் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

............................................................

திணைக்களத் தலைவரின் /
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் கையொப்பம்

பெயர் : ................................................................

பதவிப் பெயர் : ...................................................

திகதி :...............................................................

(உத்தியோகபூர்வ முத்திரையைப் பதிக்கவும்)